



# வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்!

## கருணைக் கடலான கழக அரசு

**திராவிட மாடல் அரசு**

105

**ர.பிரகாசு**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

கொரோனா பேரிடர் காலம், உலகுக்கு எத்தனையோ பாடங்களைக் கற்றுத்தந்தது. ‘தொட்டால் தீட்டு, தெருவில் நடந்தால் தீட்டு’ என்றெல்லாம் பாகுபாடுகளைக் கட்டவிழ்த்து விட்டவர்களையும் சேர்த்து, ‘தொடாதே’, ‘நெருங்காதே’, ‘தெருவில் நடக்காதே’ என வீட்டுக்குள் முடக்கி வைத்தது, பேரிடர் காலம். கடைகள் இல்லை, உணவகங்கள் இல்லை, பொதுவெளியில் மனிதர்களே இல்லை என்ற அந்த ஊரடங்கு காலத்தில் மனிதர்களை விட, அதிக துயரங்களைச் சந்தித்தவை தெருவில் இருக்கும் பிராணிகள்தான்.

சென்னை போன்ற மாநகரங்களில் நாய், பூனைகள் மட்டுமின்றி, ஆடுகள், மாடுகள் கூட தெருவில்தான் சுற்றித்திரிகின்றன. உலகம் இயங்கும் நாட்களிலேயே இவ்வுயிர்களுக்கான உணவு சுகாதாரமாகவும், போதிய அளவிலும் கிடைக்குமா என்றால், கேள்விக்குறிதான். அப்படியானால், பேரிடர் காலத்தில் இவற்றின் நிலைமையை யோசித்துப் பார்க்கவே முடியாது.

உணவு கிடைக்காமல் சாலைகளில், குடியிருப்புப் பகுதிகளிலேயே மயங்கி மாய்ந்து போன பிராணிகளும், கால்நடைகளும் ஏராளம். மயங்கிக் கிடக்கிற அவற்றின் மீது வாகனங்கள் ஏறிய சம்பவங்களும் செய்திகளாகக் காண நேரிட்டது. இவ்வுயிர்களின் மீது கவலைகொண்டு நாள்தோறும் உணவு வழங்கிய தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் ஏராளம் உண்டு. ஆனால், அந்தப் பிராணிகள் மீதும் கவலைகொண்டு பரிவு காட்டிய ஒரே அரசு நம்முடைய ‘திராவிட மாடல் அரசு’. ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற திராவிட மாடல் இலக்கணத்தை ‘எல்லா உயிர்களுக்கும் எல்லாம்’ என விரிவுபடுத்திய உன்னதத் திட்டமே ‘வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்’.

### ‘எல்லா உயிர்களுக்கும் எல்லாம்’

பல்வேறு காரணங்களால் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட விலங்குகள் உணவுக்கு வழியின்றி, பொதுவெளியில் பாதுகாப்பில்லாமல் சுற்றித் திரிகின்றன. சக பிராணிகளுடன் சண்டையிடுவதாலோ, விபத்துகளாலோ அல்லது தாக்குதல்களாலோ இந்தப் பிராணிகள் எளிதில் காயமடைகின்றன. மேலும் பாதுகாப்பான உணவு கிடைக்காமல் குப்பைகளில், தெருக்களில் கிடைப்பதை உண்கின்றன. காயங்களோடும் பாதுகாப்பு இல்லாத உணவை உண்பதாலும், தொற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு உடல் நலக்கோளாறுகள் ஏற்படுகின்றன. தெருவில் சுற்றித்திரியும் ஒவ்வொரு விலங்கையும் அடை யாளங்கண்டு, அவற்றுக்கான உணவு வழங்கி, உடல்நலக் கோளாறுகளைச் சரிசெய்வது என்பது, அரசு மட்டுமே தனித்து செய்துவிடமுடியாது.

சமூகக் கூட்டுப்பங்குடன் செய்ய வேண்டிய உயிர் நேயச் செயல்பாடு அது. அதனால், இப்படி ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்து தெருவில் சுற்றித்திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், பிராணிகள் துயர் துடைப்புச் சங்கங்கள், பிராணிகள் சேவை நிறுவனங்களுக்கு, நிதியுதவி அளிப்பதற்காக **‘வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்’** என்ற திட்டத்தை 2022-2023-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது, தமிழ்நாடு அரசு. அதன்படி, இந்த உன்னதத் திட்டத்தை 2023-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் தேதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### திட்டத்தின் நோக்கம்

வாழ்நாளெல்லாம் சமத்துவத்திற்காக உழைத்த தந்தை பெரியாரின் பெயரில், ‘சமத்துவபுரம் திட்டத்தை’ முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கியதுபோல, “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று உலக உயிர்களையெல்லாம் தன்னுயிராய் நேசித்த, அன்பின் வடிவான வள்ளலாரின் பெயரில், இத்திட்டத்தைத் தொடங்கினார் முதலமைச்சர். அதுவும் வள்ளலாரின் 200-வது ஆண்டில் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில், இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தெருவில் சுற்றித்திரியும் பிராணிகள் பராமரிப்புக்கு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், விலங்குகள் நலனில் அக்கறையுள்ள அமைப்புகள் யார் வேண்டுமானாலும், வள்ளலார் பல்லுயிர் காப்பகத் திட்டத்தில் நிதி உதவி பெற்று தெருவில் இருக்கும் பிராணிகள், கால்நடைகளுக்கு உதவ முன்வரலாம்.**

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்டு, காயமடைந்து தெருவில் சுற்றித் திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்தல், காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காகப் பிராணிகள் துயர் துடைப்புச் சங்கம் (SPCA), விலங்குகள் நல அமைப்புகள் (AWO) பிராணிகள் நலன் தொடர்பான அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு (NGO) மருத்துவ அவசர சிகிச்சை ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொள்முதல் செய்வதற்கு நிதியுதவி அளித்தல், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்து




தெருவில் சுற்றித் திரியும் விலங்குகளுக்கு உறைவிடம் கட்டுவதற்கு நிதியுதவி அளித்தல், தெரு நாய்கள் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் **வெறிநோய் தடுப்பூசி** செலுத்துவதற்கு நிதியுதவி அளித்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

### நீங்களும் முன்வரலாம் !

திட்டம் தொடங்கப்பட்டவுடன் முதற்கட்டமாக, விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி வழங்கிடவும், உறைவிடம் மற்றும் அவசர ஊர்தி சேவைக்காக, நீலகிரி - *India Project for Animal Fund Nature*, சென்னை- *Animal Care Trust*, சென்னை - *Madras Animal Rescue Society*, சென்னை - *Prithvi Animal Welfare Society* மற்றும் சென்னை - பைரவா பவுண்டேஷன் ஆகிய தொண்டு நிறுவனங்களுக்கு 2 கோடியே 14 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் முதல் தவணையாக 88 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் வழங்கினார். இரண்டாம் கட்டமாக 2023-ஆம் ஆண்டு மே 16-ஆம் தேதி, மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், 15 தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.1.14 கோடி வழங்கினார்.

அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், விலங்குகள் நலனில் அக்கறையுள்ள அமைப்புகள் யார் வேண்டுமானாலும், வள்ளலார் பல்லுயிர் காப்பகத் திட்டத்தில் நிதி உதவி பெற்று தெருவில் இருக்கும் பிராணிகள், கால்நடைகளுக்கு உதவ முன்வரலாம். தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி செலுத்தவும் நிதி உதவி கோரலாம். ஐந்தறிவு உயிர்களுக்கு உதவ மனம் இருந்தால், போதும்! பணம் தரக் காத்திருக்கிறது கழக அரசு. இணையத்தில் விண்ணப்பமும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வரவேற்க, கால்நடை மருந்தகங்களும் காத்திருக்கின்றன.

‘மானுடப்பற்றைத் தவிர, வேறெந்த பற்றும் இல்லை’ என்றனர் பெரியாரும், அண்ணாவும்! அவர்கள் வழியில் வந்த நமது முதல்வரோ இன்னும் ஒருபடி மேலே சென்று, அனைத்து உயிரினங்கள் மீதான பற்றையும் திட்டமாகத் தீட்டியிருக்கிறார். அதுவும்... உயிர்களிடத்து வேற்றுமையும், ஏற்றத்தாழ்வும் காணாத சமத்துவ நெறியைப் போதித்த வள்ளலாரின் வழியில்... வள்ளலாரின் பெயரில்...

**...சாதனை தொடரும்**

## யு.ஜி.சி.யின் திருத்தங்கள் தேவைதானா?



பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளின் ஆபத்தை, நன்கு உணர்ந்திருக்கிறது தமிழ்நாடு. அதனால்தான், ‘பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் மாநில அரசுகளின் உரிமைகளைத் தெளிவாக மீறும் செயல். இது நமது பல்கலைக்கழகங்களின் சுயாட்சியில் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும். நமது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்துக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும்’ என்று இந்தியா கூட்டணிக் கட்சிகள் ஆளும் 9 மாநில முதல்வர்களுக்கும் கடிதம் அனுப்பினார் நம்முடைய முதலமைச்சர்.

இந்த வரைவுத் திருத்தங்களின் ஆபத்தை, மக்கள் மன்றத்தில் எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பு அரசியல் - சமூக இயக்கங்களுக்கு உள்ளது. அந்த வகையில், இன்று (ஜனவரி 28) இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள இந்திய அலுவலர்கள் அசோசியேசன் கட்டடத்தில் மாலை 5.00 மணிக்கு ‘யு.ஜி.சி. வரைவுத் திருத்தங்கள் - 2025’ என்ற தலைப்பில், கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஞானராஜசேகரன், அசோக்வர்தன் ஷெட்டி, பொருளாதார நிபுணர் வெங்கடேஷ்ஆத்ரேயா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அதேபோல நாளை (ஜனவரி 29) ‘யு.ஜி.சி. வரைவுத் திருத்தங்கள் 2025-ஐ திரும்பப் பெறு’ என்ற முழக்கத்துடன், தியாகராயர் நகரில் உள்ள தியாகராயர் அரங்கில் ‘தமிழ்நாடு எடிட்டர்ஸ் கில்டு’ சார்பாக, ஒரு கருத்தரங்கம் நடைபெறுகிறது. உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த சிந்தன், ஊடகவியலாளர்கள் ஜென்ராம், கவிதா முரளிதரன், ஆசீப், இந்திரகுமார் தேரடி உள்ளிட்ட பலர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

யு.ஜி.சி.-யின் உள்நோக்கங்களைப் புரிந்துகொள்வதற்கான ஏற்பாடாக இக்கருத்தரங்குகள் அமைந்துள்ளன. வாய்ப்புள்ளோர் பயன்படுத்திக்கொள்க!

## ஃப்ளாஷ்பேக்



### மங்கலம்பேட்டையில் தளபதி அவர்களின் உரை!



கோ.மணி

1995-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது, விருத்தாச்சலம் செல்லும் வழியில் மங்கலம்பேட்டையில் வரவேற்பு அளித்து, பேசுமாறு கேட்டுக்கொண்டோம். தலைவர் எழுச்சி நிறைந்த உரையாற்றி, எங்களுக்கு உற்சாகமளித்தார். அப்போது அவருடன் நான் எடுத்துக் கொண்ட புகைப்படம், காலத்தால் அழியாத நினைவினைத் தேக்கிவைத்துள்ளது.

**– கோ.மணி, ஒன்றியப் பிரதிநிதி, மங்கலம்பேட்டை, விருத்தாசலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### வாளும் கேடயமும் தடை!

1975-ஆம் ஆண்டு, ஒன்றிய அரசு கொண்டு வந்த இருபது அம்ச திட்டத்தை நிறைவேற்றவில்லை என சட்டமன்றத்தில் கண்டன தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தன. அதற்கு பதிலளித்த முதலமைச்சர் கலைஞர், ஒன்றிய அரசு அறிவிப்பதற்கு முன்பே அந்தத் திட்டங்கள் தமிழ்நாட்டில் நிறைவேறி இருக்கின்றன என விரிவாக உரையாற்றினார். அந்த உரை ‘வாளும் கேடயமும்’ என்ற சிறுநூலாக வெளிவந்தது. கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, அந்த நூலுக்குத் தடை விதிக்கப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

731

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131